**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 100/2013 |
| | | D/W's | : | **DW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | கோபாலகண்ணன் | CASTE | : | |
| S/O | மாயக்கிருஷ்ணன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | குலசேகரன்கோட்டை | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வழக்குச்சொத்து நத்தம் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன் உள்ள அ பதிவேடு, SLR பதிவேடு ஆகியவற்றை தாக்கல் செய்ய இயலுமா என்றால் மேற்படி அ பதிவேட்டை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்தின் பழைய சர்வே எண் 391/6 என்றால் சரிதான். UDRக்கு முன் மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 8 ஏக்கர் 12 செண்டு. மேற்படி மொத்த விஸ்தீரணத்திற்கான இடமும் பழைய குடியிருப்பு நத்தம் என்றால் சரிதான்.

2. மேற்படி இடத்தில் யார் யார் வீடு எவ்வளவு விஸ்தீரணத்தில் அமைந்திருந்தது என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றாலும், அதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றாலும் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் எந்த இடத்தில் வீதி, மற்றும் சந்து இருந்தது என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். மேற்படி மொத்த விஸ்தீரணமும் ஆதியில் ஒரே புல வரைபடமாக இருக்கும் என்றால் சரிதான். UDR திட்டத்தின் போது தான் சர்வே செய்து வீதி, சந்து மற்ற பொது இடங்களையும், வீடுகளையும் வகைப்பாடு செய்து புலவரைபடத்தில் குறியீடு செய்தார்கள் என்றால் சரிதான்.

3. UDR திட்டத்திற்கு பின்புதான் குடியிருப்பு வாசிகளுக்கு அடங்களும் சிட்டாவும் வழங்கப்பட்டது. UDR திட்டத்தின்போது வீதி, சந்து மற்ற பொது இடங்கள் , வீடுகள்

அந்தந்த இடத்தில் இருந்த நிலையிலேயே வருவாய்துறை ஆவணங்களில் குறியீடு செய்யப்பட்டது. UDR திட்டத்தின்போது நத்தம் இடத்தில் வீடு இருந்தால் கட்டிடம் இருந்த இடத்திற்கு மட்டும்தான் பட்டா வழங்கப்பட்டது என்றாலும் மற்ற நத்தம் காலியடத்திற்கு பட்டா வழங்கப்படாது என்றாலும் சரியல்ல, வீட்டை ஒட்டியுள்ள காலியிடத்திற்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

4. வீட்டை ஒட்டியுள்ள காலியிடத்திற்கு பட்டா வேண்டும் என்றால் DROவிடம் முறையீடு செய்து விசாரணைக்கு பின்புதான் முடிவு செய்யப்படும் என்றால் சரிதான்.

5. தாவா சொத்தான புல எண் 580/26 ல் உள்ள இடம் சந்து என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு உரிமையாளர் யார் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். மேற்படி சந்து ஊராட்சிக்கு சொந்தமானதா அல்லது தனியாருக்கு சொந்தமானதா என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வீட்டின் மேற்குப்புறத்திற்கு அடுத்து சந்து இல்லை என்றால் சரிதான்.

6. மேற்படி தாவா சந்தை 1ம் பிரதிவாதியின் முன்னோர்களும் 1ம் பிரதிவாதியின் வீட்டின் கிழக்குப்பக்கம் உள்ள தங்கப்பாண்டியின் முன்னோர்களும் பொதுவாக நடைபாதைக்காக பயன்படுத்தியது என்றால் அதற்கான ஆவணம் எதுவும் இல்லை. வழக்குச்சொத்தை UDR திட்டத்தின்படி சந்து என்று வகைப்பாடு செய்ததை நீக்கி 1ம் பிரதிவாதிக்கும் தங்கப்பாண்டிக்கும் பட்டா வழங்குமாறு DROவிடம் மனு தாக்கல் செய்து விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் எனக்குத்தெரியாது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.